www.tamilarangam.net

# விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தடை ஏன்?

கேள்வி — பதில்

வெளியிடுவோர் :

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**

**தமிழ்நாடு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தடை ஏன்?

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது
விதிக்கப்பட்டிருக்கும் தடைக்கு ஆதரவாக
பார்ப்பன—பாசிச ஜெயலலிதா கும்பலும்
மைய அரசும்
கூறும் காரணங்களை முறியடிக்கவும்,
கண்மூடித்தனமான புலி ஆதரவாளர்களை
அம்பலப்படுத்தவும்
கேள்வி-பதில் என்றும்
எளிய வடிவத்தில்
இந்தப் பிரசுரம் வெளியிடப்படுகிறது.

மக்கள் கலை இலக்கியக் கழகம்
தமிழ்நாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

○ வெளியிடுவோர் :
மக்கள் கலை இலக்கியக் கழகம்,
தமிழ்நாடு.

○ பதிப்பு : ஜூலை 1992.

○ விலை : ரு 1-50

○ பிரதிகள் கிடைக்குமிடம் :
சீனிவாசன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்,
சென்னை-600 049.

1. விடுதலைப்புலிகள் அமைப்பு இப்போது தடைசெய்யப் பட்டிருப்பதன் நோக்கம் என்ன?

புலிகள் அமைப்பு தடைக்கு இரண்டு காரணங்கள் உண்டு.

முதலாவதாக 'வரலாறு காணாத' வெற்றியைப் பெற்று ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா கும்பல், ஆட்சிக்கு வந்த ஒரே ஆண்டிற்குள் வரலாறு காணாத வகையில் செல்வாக்கை இழந்து வருகிறது. கடுமையான விலை யேற்றம், ஜெயலலிதாவின் ஆடம்பர வெறி, அதிமுக வினரின் பகிரங்கக் கொள்ளை, ஆயிரம் கார் பவனி, பச்சை குத்திகளின் பாதபூசை, பத்திரிகைகள் மீதான தாக்குதல், மகாமகச் சாவு, போலீஸ் கற்பழிப்புகள், துப்பாக்கிச் சூடுகள், சட்டசபைக்குள்ளேயே எதிர் கட்சிகளுக்கு விழும் அடி-உதை. இவை காரணமாக மக்களின் வெறுப்பு அதிக மாகி வருவது மட்டுமல்ல; ஜெயாவை ஆதரித்து ஆட்சியிலமர்த்திய பார்ப்பனப் பத்திரிகைகளேகூட சகிக்க முடியாமல் முனகும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதிலிருந்து மக்களை திசை திருப்பும் முயற்சியே 'புலி தடை' எனும் கூச்சல்.

இதைவிட முக்கியமான காரணம் என்னவென்றால் பார்ப்பன—பாசிச ஜெயா கும்பல் தமிழின உணர்வு, உரிமை போன்றவற்றிற்கு இயல்பிலேயே எதிரானது. தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கைகள் முற்றிலுமாகத் தடுக்கப்பட்டுவிட்டது என தமிழக அரசும், போலீசுமே பலமுறை கூறிவிட்டன. பிறகு, இல்லாத புலிகளுக்கு எதற்குத் தடை? எனவே புலிகளை ஒடுக்குவதற்காக ஜெயா கும்பல் இந்தத் தடையைக் கோரவில்லை; தமிழகத்தில் உள்ள புரட்சிகர அமைப்புகள் மற்றும் இன உரிமை இயக்கங்களை ஒடுக்குவதற்குத்தான் இந்தத் தடை,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'தடா' மிரட்டல் போதாதென்றுதான் கூடுதலாக இந்தத் தடை மிரட்டல்.

2. அவ்வாறெனில் மத்திய அரசுக்குத் தடை செய்வதில் உடன்பாடு இல்லையா? ஜெயலலிதாவின் வற்புறுத்தல் மட்டும்தான் காரணமா?

அது மட்டுமே காரணமல்ல. ஆனால் புலிகளைத் தடை செய்வது பற்றி முடிவெடுப்பதில் மத்திய அரசு மதில் மேல் பூனையாகவே இருந்தது. ''ராஜீவ் கொலையைப் புலிகளே செய்திருந்தாலும் புலிகள் அமைப்பைத் தடைசெய்வது நல்லதல்ல; தடை செய்வதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கையில் தலையிடவும், மேலாதிக்கம் செலுத்தவும் முகாந்திரம் இல்லாமல் போய்விடும்'' என்று 'காங்கிரசில் ஒரு பிரிவும் அதிகார வர்க்கமும் கருதின.

இன்னொருபுறம், வாழப்பாடி ஜெயலலிதா கும்பல், தமிழ் இன உணர்வு எதிர்ப்பு, திமுக எதிர்ப்பு இவற்றை நிறைவேற்ற 'புலிகள் தடை' கோரிக்கையை முன்வைத்து பெரும் பிரச்சாரம் மேற்கொண்டது.

மத்திய அரசின் நோக்கமும், வாழப்பாடி ஜெயா கும்பலின் நோக்கமும் மோதிக்கொண்டதிலிருந்து மத்திய அரசின் சபலம், தடுமாற்றத்தைத் தெளிவாக உணர முடியும். ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டவுடன் கொலையாளிகள் யார் என்பது பற்றி ஐயங்கள் எழுந்தன. உள்துறை அமைச்சர் சவான் 'சி ஐ ஏ சதியாக இருக்கலாம்' என்று பேசினார். கொலையில் அன்னிய சக்திகள் ஈடுபட்டுள்ளனவா என்பதை மட்டுமே விசாரிக்க ஜெயின் கமிஷன் அமைக்கப்பட்டது. ஜெயலலிதா தலைமையிலான பார்ப்பன - பாசிசக் கும்பல் தடை கோரிக்கையை தீவிரப் படுத்திய நேரத்தில்கூட 'தடை செய்ய போதிய ஆதாரம் இல்லை' என்றார் சவான். பிரபாகரனை குற்றவாளியாக அறிவிப்பதிலும் மத்திய அரசு தடுமாறியது. குற்றப்



சாட்டப்பட்டதையே காரணமாக்கித் தடை செய்ய வியலாத சட்ட நெருக்கடியும் தோன்றியது.

ஆனால் தடை கோரிக்கையை முன்வைத்த ஜெயலலிதா, ராஜீவைக் கொன்றது புலிகள்தான் என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டார். புலிகளுடன் திமுகவையும் இணைத்து நடத்திய பொய்ப் பிரச்சாரத்தால் மிருக பலத்துடன் ஆட்சியையும் பிடித்தார். காங்கிரஸ் கட்சியும் ராஜீவின் சிதைந்த பிணத்தைக் காட்டியே வெற்றி பெற்றது.

தமிழ்நாடு சிறப்புப் புலனாய்வுக் குழு (TANSIT) என்ற அமைப்பை ஏவி தமிழின உணர்வாளர்கள், புரட்சியாளர்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகளை ஜெயலலிதா மேற்கொண்டார். ஓட்டு வேட்டைக்கும் அரசியல் ஆதாயத்திற்குமாகச் செய்யப்பட்ட பிரச்சாரம் அதன் எதிர் விளைவை ஏற்படுத்தியது. மத்திய அரசு தடை செய்வதில் தயக்கம் காட்டியதும், ராஜீவ் கொலையாளிகளை மத்திய அரசு பாதுகாக்கிறதோ என்ற சந்தேகம் எழுவதாக பிரச்சாரம் செய்தார் ஜெயலலிதா.

தெற்காசிய மேலாதிக்கம் என்ற மைய அரசின் நீண்டகால நோக்கத்திற்கும், வாழப்பாடி - ஜெ கும்பலின் உடனடி அரசியல் நோக்கத்திற்குமிடையே தற்காலிகமாகத் தோன்றிய முரண்பாட்டின் விளைவுதான் மைய அரசின் தடுமாற்றம்.

இனி புலிகளுக்குப் பதிலாக பிற எதிர்க்கட்சிகளைப் பயன்படுத்தி இலங்கையில் தலையிடலாம் என்ற மாற்றுத் திட்டத்தின் அடிப்படையிலும், புலிகளைப் பழிவாங்கும் நோக்கத்துடனும்தான் இந்தத் தடை அறிவிக்கப் பட்டிருக்கிறது.

''இந்தியாவின் வழியில் இலங்கை அரசும் புலிகளைத் தடை செய்ய வேண்டும்'' என்ற கோரிக்கையை பண்டார நாயகா மூலம் வெளியிட்டுள்ளது மத்திய அரசு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



3. இந்தியாவில் பிரிவினை வாதத்தைத் தூண்டும் புலிகள் அமைப்பைத் தடை செய்வது எப்படித் தவறாகும்?

மத்திய அரசு புலிகளைத் தடை செய்ய இரண்டு காரணங்களைக் கூறுகிறது. ''தமிழர் மீட்சிப் படை'' என்ற பெயரில் தமிழக இளைஞர்கள் சிலருக்குப் பயிற்சியும் ஆயுதமும் தந்து தமிழகத்தில் பிரிவினையைத் தூண்டியது. தடை செய்யப்பட்ட அஸ்ஸாம் உல்ஃபா தீவிரவாத அமைப்புடன் தொடர்பு கொண்டுள்ளது; இதன் மூலம் இந்தியாவின் பிரதேச ஒருமைப்பாட்டுக்கு அபாயம் விளைவிக்கும் செயல்களில் புலிகள் ஈடுபடுகின்றனர்.'' இவைதான் புலிகளின் மீதான தடைக்கு மத்திய அரசு அறிவித்துள்ள காரணங்கள். அதாவது அன்னிய சக்திகள் நமது உள்விவகாரத்தில் தலையிடுகின்றன; பிரிவினையைத் தூண்டுகின்றன என்பதுதான்,

இவற்றை வாதத்திற்கு உண்மையென்றே கொண்டாலும் சில முக்கிய கேள்விகள் எழுகின்றன:

'புலிகளின் தாகம், தமிழீழத் தாயகம்' என்பதுதான் புலிகளின் முழக்கம். அவர்களுக்கு இந்தியாவில் முகாம் அமைத்து, ஆயுதம் கொடுத்து, பயிற்சி கொடுத்தது; பணம் கொடுத்தது, ராஜீவ் காந்தி ரகசியமாக நிதி கொடுத்தது, எம். ஜி. யார் பகிரங்கமாகப் பணம் கொடுத்தது—இவை போன்ற செயல்களெல்லாம் இலங்கையைப் பிரிக்கும் சதிவேலையில்லையா? அகதிகள் ஏராளமாக வருகிறார்கள் என்றாலும் அரசு தந்திர ரீதியில் நிர்ப்பந்தம் கொடுத்திருக்கலாமேயொழிய எப்படி நேரடியாகத் தலையிடலாம்?

1971ல் கிழக்கு வங்காளத்தில் முக்தி வாகினி என்ற பெயரில் இந்திய ராணுவத்தை அனுப்பி, முஜிபுர் ரஹ்மானுக்கு 'சுதந்திர பங்களா' தேசு பெற்றுத் தந்தது பாகிஸ்தானைத் துண்டாடிய பிரிவினைவாதச் செயல் இல்லையா?



சீன அரசுக்கு எதிராகக் கலகம் செய்யும் திபெத்திய லாமாக்களுக்கு அடைக்கலம் தந்து ஆதரிப்பதற்கு என்ன பெயர்?

ஆப்கானிஸ்தான் மக்களின் எதிரியும் ரசிய எடுபிடியுமான, நஜிபுல்லாவின் குடும்பத்திற்கு அடைக்கலம் தந்து பாதுகாப்பதற்கு என்ன பொருள்?

பாகிஸ்தான் சிந்து மாகாணத்தில் இந்தியா கலகத்தைத் தூண்டுகிறதே! என்ன நோக்கம்?

காஷ்மீரிலும் பஞ்சாபிலும் பாகிஸ்தான் தலையிடுவதாக இந்திய அரசு அன்றாடம் கூக்குரலிடுகிறதே, பாகிஸ்தானுடன் தூதரக உறவுகளை முறித்துக் கொண்டு விட்டதா?

உல்ஃபா போராளிகளுக்கும், நாகா, மணிப்பூர் போராளிகளுக்கும் பர்மாவும், வங்காளதேசமும் அடைக்கலமளிப்பதாக இந்திய ராணுவம் தொடர்ந்து குற்றம் சாட்டுகிறதே, அந்த நாடுகளுடன் உறவுகள் முறிக்கப்பட்டு விட்டனவா?

இந்தியாவில் அமெரிக்காவின் உளவு வேலைகள் பலமுறை நிரூபிக்கப்பட்டிருக்கின்றன; ராஜீவ் கொலையில் சுவான் சி. ஐ. ஏ. மீது குற்றம் சாட்டினார்; இந்தியாவின் அரசியல் பொருளாதார விவகாரங்களில் தொடர்ந்து பலவழிகளிலும் தலையிடுகிறது அமெரிக்கா. இவையெல்லாம் இந்தியாவின் இறையாண்மையை கேள்விக்குள்ளாக்கவில்லையா?

'தடை'யை விதித்தவர்களும் தடையைத் துதிப்பவர்களும் இக்கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். எனவே, தமிழர் மீட்சிப்படை; உல்ஃபா - புலிகள் தொடர்பு, பிரிவினைவாதத் தூண்டல் என்பவை தடைக் கான காரணங்களாகமாட்டா. அது மட்டுமின்றி இவை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெறும் குற்றச்சாட்டுகள். உரிய முறையில் விசாரித்து இன்னும் நிரூபிக்கப்படவில்லை. மேலும், புலிகள் மீது குற்றம் சாட்டுவதற்குமுன், பிரிவினை நோக்கத்திற்காகப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்படும் 'தமிழர் மீட்சிப்படை'யின் மீது அரசு குற்றத்தை முதலில் நிரூபிக்க வேண்டும். இவையெதுவும் செய்யப்படவில்லை. எனவே தடைக்கு அரசு கூறும் காரணங்கள் ஜனநாயக விரோதமானவை மட்டுமல்ல, சட்ட நெறிமுறைகளுக்கும் எதிரானவை.

4. இருக்கலாம். ஆனால் ராஜீவ்காந்தியை விடுதலைப்புலிகள்தான் கொன்றார்கள் என்பது கிட்டத்தட்ட உறுதியான பின்னும் தடை செய்தது தவறா?

'கொல்லப்பட்டது ராஜீவ்காந்தி என்ற தனி நபர் அல்ல; இந்தியாவின் முன்னாள் பிரதமர்' என்ற அரசியல் கண்ணோட்டத்திலிருந்து இக்கேள்வி எழுப்பப்படுகிறது ஆகவே இந்தக் கேள்விக்கான பதிலை சட்டம், தார்மீக நெறி, அரசியல் ஆகிய மூன்று நிலைகளிலிருந்தும் பரிசீலிக்க வேண்டும்.

சட்ட ரீதியில் ராஜீவை விடுதலைப் புலிகள் கொன்றார்கள் என்பது குற்றச்சாட்டு நிலையிலேயே இருக்கிறது. குற்றப்பத்திரிக்கையே ஓராண்டுக்குப்பிறகு இப்போதுதான் கொடுக்கப்பட்டுள்ளது. குற்றவழக்கின் விசாரணையே இன்னும் தொடங்கவில்லை. அதே நேரத்தில் இவ்வழக்கு இந்திய குற்றவியல் சட்டத்திற்கே (IPC) முரணான பயங்கரவாத தடைச் சட்டப் பிரிவுகளின் கீழ் விசாரிக்கப் படுகிறது. இதன் மூலம் விசாரணை ரகசியமாக நடத்தப் படும். விசாரணை விபரங்கள் பத்திரிகைகளில் வெளி வராது. குற்றஞ்சாட்டப் பட்டவர் தனக்கு எதிரான சாட்சிகள் விபரத்தைத் தெரிந்து கொள்ள முடியாது. குற்றம் சுமத்துபவர்கள் குற்றத்தை நிரூபிப்பதற்கு



பதிலாக, குற்றஞ் சாட்டப்பட்டவர் தன்னை நிரபராதி என நிரூபித்துக் கொள்ள வேண்டும்.

தடா சட்டம் அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்காக இந்தியா முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் மகஇக தோழர்கள் சுவரொட்டி ஒட்டியதற்காகத் தடாவில் கைது செய்யப்பட்டனர்! ஜாமீன் கொடுத்தால் தடா; மருந்து விற்றால் தடா; கார் ஓட்டினால் தடா......

இப்படி பார்த்த மாத்திரத்தில் பொய் வழக்கு என்று புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு இச்சட்டம் முறை கேடாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (இச்சட்டமே முறைகேடானது என்பது வேறு விசயம்) ஆனால் மேற் சொன்ன பொய் வழக்குகளில் கைது செய்யப்பட்டவர் களுக்கு ஜாமீன் தருவதற்குக்கூட சிறப்பு நீதிமன்றம் நீண்ட நாள் மறுத்தே வந்தது. இத்தகைய சிறப்பு நீதி மன்றம்தான் இந்தக் கொலை வழக்கையும் விசாரிக்கப் போகிறது. 'நீதி' வழங்கப் போகிறது,

இவை ஒருபுறமிருக்க, ராஜீவைப் புலிகள்தான் கொன்றார்கள் என்பது கிட்டத்தட்ட நிச்சயமாகி விட்டது என்று சொல்பவர்கள் போபர்ஸ் ஊழலில் ராஜீவ் அடித்த கொள்ளையும் கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டதென ஒப்புக் கொள்வார்களா? அதை மட்டும் சட்டப்படி நிரூபிக்கச் சொல்கிறார்களே!

அடுத்து அரசியல் ரீதியில் பார்த்தால், ராஜீவ் கொலைக்கு அரசியல் காரணத்தைத்தான் சிறப்புப் புலனாய்வுக் குழு முன் வைத்தது. கொலையாளி என்று கருதப்படும் "தணு என்ற ஈழப்பெண் இந்திய ராணுவத் தின் கும்பல் கற்பழிப்புக்கு ஆளானவர். அதற்குப் பழி வாங்கவே ராஜீவைக் கொன்றார்". என்று குற்றப் பத்திரிகையில் சேர்க்கப்பட்டது. ஏனெனில் குற்றத்திற்கு ஒரு வலுவான தூண்டுதல் (Motive) இருந்ததாகக் காட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இது குறிப்பிடப்பட்டது. இதைச் சேர்த்தால் குற்றம் அரசியல் ரீதியில் பலவீனமாகிவிடும். இந்திய ராணுவ அத்துமீறல் உண்மையாகிவிடும் என்ற அச்சத்தின் காரணமாக இவ்விசயம் குற்றப்பத்திரிகையிலிருந்து இறுதி நேரத்தில் நீக்கப்பட்டது.

ஆனாலுங்கூட இந்திய ராணுவம் இலங்கையில் நடத்திய கற்பழிப்பு, கொலை இவற்றை மறைக்க முடியாது. ஈழமக்களின் ஆத்திரத்தை ஒதுக்கித் தள்ளவும் முடியாது.

ஒரு கொலையின் நோக்கத்திற்கு ஏற்ப தண்டனையும் வேறுபடுகிறது. அநியாயத்திற்காகச் செய்யப்படும் கொலைக்கும், அரசியல் கொலைக்கும் தண்டனையிலும் வேறுபாடு உண்டு. தண்டனையைத் தீர்மானிப்பதில் கொலையின் நோக்கம் முக்கியமானது.

வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக பாராளு மன்றத்தில் குண்டுவீசிய பகத்சிங் இந்திய மக்களைப் பொருத்தமட்டும் மாவீரன். தேசபக்தன். குற்றவாளியல்ல.

பஞ்சாபில் ஜாலியன் வாலாபாக்கில் 300 பேருக்கு மேல் படுகொலை செய்த வெள்ளை ராணுவ அதிகாரி ஜெனரல் டயரை சுட்டுக் கொன்ற உத்தம்சிங் தேசபக்தன், குற்றவாளியல்ல.

ஏனென்றால் இவையெல்லாம் வெள்ளையர்களின் அடக்குமுறைக்குப் பலியான மக்கள் தேடிக்கொண்ட நிவாரணம்.

ஆக, ராஜீவைக் கொன்றது புலிகளாக இருந்தாலும், ஈழத்தமிழராக இருந்தாலும் இதுஒரு அரசியல் கொலையே. இதை சாதாரண கொலைக்குற்ற வழக்கைப் போல் கருதி தீர்ப்பு கூற முடியாது.

இறுதியாக, தார்மீக அடிப்படையில் பார்த்தால் இலங்கையில் ராணுவ வீரர்கள் செய்த குற்றத்திற்கு



ராஜீவை எப்படிப் பழிவாங்கலாம் என்ற வாதத்தை சிலர் முன் வைக்கின்றனர். 1987 இந்திய இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானபோது உலகத்திலேயே நடக்காத சாதனை என்று சாதனைக்கு உரிமை கொண்டாடியவர்கள் குற்றத்திற்குப் பொறுப்பு ஏற்க வேண்டாமா? இந்திய ராணுவம் ஈழத்தமிழ் மக்கள் மீது நடத்திய கொடுமைகளுக்கு, உத்தரவு போட்ட ராஜீவ் தான் பொறுப்பு.

நூரன்பர்க் விசாரணையில் தண்டிக்கப்பட்டவர்கள் நேரடியாகக் கொலைக்குற்றம் புரிந்த ஜெர்மன் சிப்பாய்கள் மட்டுமல்ல; அதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகளும், நாஜிக்கட்சியினரும் கூடத்தான்.

அப்படியேயானாலும் ஈழத்தில் அட்டூழியம் புரிந்த ராணுவ வீரர்கள், அதிகாரிகள் யாராவது விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார்களா? இல்லையே.

அன்றைய முதல்வர் கருணாநிதி ராணுவத்தை வரவேற்க மறுத்தபோது ''ராணுவத்தை அவமதித்து விட்டார். ராஜீவின் உத்திரவுப்படி தானே ராணுவம் செயல்பட்டது. எய்தவன் இருக்க அம்பை நோவதா'' என்று 'நியாயம்' பேசினர். அம்பையும் நோகவிடக் கூடாது. எய்தவனையும் தண்டிக்கக் கூடாது என்றால் யார்தான் பொறுப்பு?

இந்திரா கொலையையொட்டி டெல்லியில் காங்கிரஸ் குண்டர்கள் நடத்திய சீக்கியப் படுகொலைகளுக்குக் காரணமானவர்களை தண்டித்தார்களா? மாறாக, 'பெரிய மரம் சாய்ந்தால் பூமி அதிரத்தான் செய்யும்' என்று இரக்க மற்று படுகொலைகளை நியாயப்படுத்தி பேசினார் ராஜீவ். அந்தப் பேச்சில் பற்றிய நெருப்பு இன்னும் பஞ்சாபில் அணைக்கவே முடியாமல் எரிந்து கொண்டிருக்கிறது.

தனிநபர் கொலை அரசியல் வழிமுறை என்ற வகையில் தவறானது; ஆனால் ராஜீவ் கொலையாளிகள் என்று

www.tamilarangam.net



கருதப்படுவோர் மீது நடவடிக்கை எடுக்க சட்ட ரீதியிலும் அரசியல் ரீதியிலும், தார்மீக ரீதியிலும் இந்திய அரசுக்கு அருகதை இருக்கிறதா என்றால் இல்லை,

5. நாம் இராணுவத்தை அனுப்பச் சொன்னதால் தானே ஈழத்தமிழர்கட்கு உரிமை பெற்றுத்தரும் நல்ல நோக்கத்தில் இந்திய அரசு போராளிகளுக்கு உதவியது, ஒப்பந்தம் போட்டது, அகதிகளைப் பாதுகாத்தது. அப்படியிருந்தும் ஒப்பந்தத்தை மதிக்காமல் புலிகள் தொடர்ந்து இந்தியாவை எதிர்ப்பது எப்படி சரியாகும்?

இலங்கையின் அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி தனது ராணுவ வல்லமையைக் கொண்டு மேலாதிக்கம் செலுத்துவதே இந்தியாவின் நோக்கம். ராணுவத்தை நாங்கள் அனுப்பச் சொல்லவில்லை. திக, திமுக, நெடுமாறன் போன்றோரின் சிண்டைப் பிடித்து கேட்க வேண்டிய கேள்வி இது. ராணுவத்தை அனுப்பினால் அது ஈழத்தமிழர்களுக்கே அபாயமாக முடியும் என்று எதிர்த்த போது தமிழ்த் துரோகி என எம்மை வசை பாடினர்.

புலிகள் உட்பட பிற ஈழத்தமிழ் குழுக்களையும் நிர்ப்பந்தித்து மிரட்டி ஒப்பந்தம் போட்டது, ராஜீவ் அரசு. சரி நல்ல நோக்கத்தில் போட்டதாகவே வைத்துக் கொள்வோம். இதில் ஒரு முக்கிய தரப்பான விடுதலைப் புலிகள் ஏற்க மறுத்தபோது மரியாதையாக வெளியேறியிருந்தால் அது நல்ல பஞ்சாயத்துக்காரனுக்கு அழகு. அதை விட்டு விட்டு ஆயுதங்களைப் பறிமுதல் செய்து புலிகளை ஒழிக்கும் வேலையில் இறங்கியது ஏன்? புலிகள் பணியவில்லை என்றதும் துரோகி வரதராஜப் பெருமாளை முதல்வராக்கியது ஏன்? போராளிகளை சுக்கு நூறாக உடைத்து ஒருவரோடொருவர் மோதவிட்டது ஏன்?

அப்படி போடப்பட்ட ஒப்பந்தமாவது நடைமுறைப் படுத்தப்பட்டதா? இன்று வரை இல்லையே? இதற்கு என்ன பதில்?



அகதிகளுக்கு மறுவாழ்வளிக்கும் நோக்கம் நேர்மையானதென்றால், இப்போது அவர்களின் விருப்பத்திற்கு விரோதமாக, கட்டாயமாக வெளியேற்றுவது ஏன்? திபெத்திலிருந்து ஓடிவந்த லாமாக்களுக்கு உதவிமட்டுமல்ல அரசுப் பதவிகளே கொடுத்திருக்கும் போது, ஈழத்தமிழ் குழந்தைகளுக்குப் பள்ளிகளில்கூட இடம் கொடுக்க மறுப்பதேன்?

அன்று ஈழத்தமிழ் மக்களுக்காக 'கண்ணீர்' விட்டு விமானம் மூலம் உணவுப் பொட்டலம் போட்டார்கள். இன்று, என்றுமில்லாத அளவு உணவு உடையின்றி ஏன் மின்சாரம் கூட இல்லாமல் யாழ்மக்கள் அணுஅணுவாய்ச் சாகிறார்களே! உணவு, மண்ணெண்ணை, மருந்து எடுத்துச் சென்றால்கூட கடத்தல் எனத் தடுப்பது மட்டுமல்ல, குடாவிலே போடுகிறார்களே! எங்கே போயிற்று மனிதாபிமானம்?

ஒரு நாட்டின் அகதிகளுக்குத் தஞ்சமளிப்பதனாலேயே அவர்களின் விதியைத் தீர்மானிக்கும் உரிமையை எடுத்துக் கொள்ள எவருக்கும் அதிகாரமில்லை. இந்தியா மட்டுமல்ல; ஈழஅகதிகளுக்கு எத்தனையோ ஐரோப்பிய நாடுகள் தஞ்சமளித்திருக்கின்றன. இந்தியாவைவிட கௌரவமாகவும் நடத்துகின்றன. அதற்காக அந்நாடுகள் தலையிடவில்லையே!

பாலஸ்தீன அகதிகள் பல இஸ்லாமிய நாடுகளில் வாழ்கின்றனர். அதற்காக தஞ்சமளித்த அராபிய நாடுகள் அராபத்தை ஓரங்கட்டிவிட்டு இஸ்ரேலுடன் சமாதான ஒப்பந்தம் போட முடியுமா? உலகில் எவரேனும் ஏற்றுக் கொள்வார்களா?

தங்களது தலைவிதியைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை வேண்டுமெனப் போராடியதன் விளைவாகத்தான் சொந்த நாட்டைவிட்டு இங்கே அகதிகளாகக் குடியேறும் நிலைமை ஈழத்தமிழ் மக்களுக்கு

த்மிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏற்பட்டது அப்படியிருக்க, அகதிகளாகத் தங்க இடம் கொடுத்த காரணத்திற்காகவே அவர்களது தலைவிதியை தீர்மானிக்கும் உரிமையை பறிக்கிறது இந்திய அரசு. சாட்சிக்காரனின் (இந்தியா) காலில் விழுவதற்குப் பதில் சண்டைக்காரனின் (சிங்கள அரசு) காலிலேயே விழுந்து விடலாமே!

கணவன் - மனைவி தகராறில் பஞ்சாயத்து செய்யப் போனவன் அந்தப் பெண்ணின் கையைப் பிடித்து இழுத்த கதைதான் ஈழத்தில் இந்தியாவின் அக்கறை, சமாதானம் எல்லாம்.

6. என்னதான் சொன்னாலும் புலிகள் தமிழக மக்களிடம் செல்வாக்கு இழந்துவிட்டனர்; நடைக்குப் பெரும் எதிர்ப்பும் இல்லையே?

புலிகளுக்குத் தற்போது ஆதரவு ஏன் இல்லை என்பதை பரிசீலிக்குமுன், முன்பு ஆதரவு எப்படி வந்தது என்று பார்ப்பது அவசியம்.

ஈழப்பிரச்சனையின் தொடக்க காலத்தில் பத்திரிகைகள் ஆதரித்தன; டி. வி, வானொலி ஆதரித்தன; புகைப்படக் கண்காட்சிகள், வீடியோ காட்சிகள் நடத்தப்பட்டன;

உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், ஊர்வலம், அரசாங்க கடையடைப்புகள் எனப் போராட்டங்கள் நடந்தன; எம். ஜி. ஆர். நான்கு கோடி பணம் கொடுத்தார் ராஜீவ் ஆயுதமும் பணமும் அள்ளிக் கொடுத்தார். பயிற்சி முகாம் கள் அமைத்துக் கொடுத்தனர். தமிழக மக்கள் உணர்வு பூர்வமாக ஆதரித்தனர்.

ஆதரவு ஏன் குறைந்தது? போராளிகள் கொலை கொள்ளையில் ஈடுபட்டதாலா? இல்லை. அப்போதும் இவை நடந்தனவே, 'ரா' உளவு நிறுவனத்தின் உதவியுடன்



போதை மருந்து கடத்தினர்; சென்னை விமான நிலையத்தில் குண்டு வெடித்தது; சூளைமேட்டில் துப்பாக்கி மோதல் நடந்தது; இவை போல் இன்னும் பல. அன்று இவையெல்லாம் ஒரு பொருட்டாகவே கருதப்படவில்லை.

ஆனால் இந்திய இலங்கை ஒப்பந்தத்தைப் புலிகள் ஏற்க மறுத்து எதிர்த்தவுடன் கதை தலைகீழாக மாறியது. அரசின் ஊதுகுழலான டிவி, வானொலியும், பத்திரிகைகளும் பொய் அவதூறுகளை அள்ளி வீசினர்.

ராஜீவை, திமுக உதவியுடன்தான் புலிகள் கொன்றனர் என்று பிரச்சாரம் நடந்தபோதும் காங்கிரஸ், அதிமுகவினர் உதைத்த போதும், திமுக எதிர்ப்பின்றி பின்வாங்கியது அவ்வாறு அவர்கள் கொலை செய்திருந்தாலும் ராஜீவ் அதற்குத் தகுதியானவர்தான் என்று பேச மக்கள் கலை இலக்கியக் கழகமும், எழுத புதிய கலாச்சாரமும் புதிய ஜனநாயகமும் தவிர வேறு ஆளில்லை. அப்படிப் பேசிய எழுதிய எங்கள் மீது அடக்குமுறை ஏவப்பட்டது. எங்கள் கருத்தோடு உடன்பட்ட போதும் பலர் மௌனம் சாதித்தனர். கோழைத்தனத்திற்கு அரசியல் தந்திரம் எனப் பெயர் சூட்டிக்கொண்டனர்,

இதன் விளைவு, ராஜீவைக் கொன்றவர்கள் திமுகவும் புலிகளும் தான் என்ற பொய்ப் பிரச்சாரத்தைப் பகிரங்கமாகச் செய்து சட்டவிரோதமாக ஆட்சிக்கு வந்தார் ஜெயலலிதா. அதிகாரம் கையில் கிடைத்ததும் இன்று முழுவீச்சில் புலி எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார். பத்திரிகைகளும் இதற்கு தூபம் போடுகின்றன. பொய்க் கருத்துக்களுக்கு இரையான தமிழக மக்கள் மௌனமாயினர்.

ஆகவே, அரசியலில் பெரும்பான்மைக்கு வால்பிடிப்பது சந்தர்ப்பவாதம். பெரும்பான்மை நாடுகள் அமெரிக்காவை ஆதரித்தன என்பதால் ஈராக் மீதான யுத்தம் நியாயமாகி விடுமா? அன்று பெரும்பான்மை மக்களும், அதிகாரத்தில்

www.tamilarangam.net



இருந்து பாதிரிகளும் உலகம் தட்டை என்று போதும் பூமிப்பந்து கலிலியோவின் கையில் சுற்றிக் கொண்டுதானே இருந்தது! இவ்வளவு ஏன்? இன்று மத்திய மாநில அரசுகளின் ஊழல், அதிகாரமுறைகேடு, விலைவாசி ஏற்றம் இன்னபிற அடிப்படைப் பிரச்சனைகள் இருந்தபோதும் பெரும்பான்மை மக்கள் மௌனமாகஇருப்பதால் இவையும் நியாயமாகிவிடுமா?

பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் அறியாமையும் மௌனமும்தான் சிறுபான்மை சுரண்டும் கூட்டத்தின் மூலதனம். பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலுக்கும் இதுவே ஆயுதம். பெரும்பான்மையைக் காரணம் காட்டி ஒதுங்கிக் கொள்வது மடமை; அடங்கிப் போவது கோழைத்தனம். எனவே புலிகள் மீதான தடைக்கு பெரும் எதிர்ப்பு இல்லை என்பதாலேயே அது நியாயமாகிவிடாது.

7. தமிழர் உரிமைக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்கும் திமுகவே மௌனமாகத்தானே இருக்கிறது?

தமிழர் நலன் என்பது திமுகவின் 'வீரத்தையும் மானத்தையும்' வைத்துத் தீர்மானிக்கப்படுவதல்ல. சீன இந்திய போரின் போது திராவிட நாடு கோரிக்கையை கைகழுவியது திமுக. 1967ல் ஆட்சிக் 'கட்டிலில்' அமர்ந்தவுடன் மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற முழக்கம் அரசியல் சட்டப்பிரிவு 356ஐப் பார்த்து தேசிய நீரோட்டத்தில் கரைந்து போனது.

இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்பவர்கள் 1965 இந்தி எதிர்ப்பின் போது அதை மாணவர்கள் போராட்டம் என்று கூறி ஒதுங்கிக் கொண்டனர். வெளிநாட்டில் இந்தியைப் பரப்பும் பாராளுமன்றக் குழுவில் முரசொலி மாறன் இடம் பெற்றார். இதுதான் இந்தி எதிர்ப்பின் யோக்கியதை.

ஈழத்தமிழர்களுக்காக மாலை மாலையாகக் கண்ணீர் விட்ட கருணாநிதி மீண்டும் முதலமைச்சர் ஆனபின் அது



அவர்களின் உள்நாட்டுப் பிரச்சனை என்று கூறினார். தடாவைப் பயன்படுத்தி ஜெயலலிதா அரசியல் பழிவாங்கலை மூர்க்கமாக நடத்தும்போதும், அவரது அமைச்சரே தடாவுக்கு பலியான போதும் தடா முறைகேடாக பயன்படுத்தப்படுவதாகக் கூறுகிறாரே தவிர இக்கொடிய சட்டத்தை நீக்கக் கோரவில்லை. திமுகவும் கருணாநிதியும் தமிழர் நலனுக்காகப் பெற்றுத் தந்தது ஏதுமில்லை. ஆனால் விற்றுத்தின்றது ஏராளம்.

''சினிமா நட்சத்திரங்களின் அழகு சோப் லக்ஸ்'' என்ற விளம்பரத்தில் எவ்வளவு உண்மை இருக்கிறதோ அவ்வளவு உண்மைதான் ''தமிழர் நலன் காப்பது திமுக'' என்ற பிரச்சாரத்திலும் இருக்கிறது.

8. அப்படியானால் பா, ம. க, திக, நெடுமாறன் போன்றோர்...?

திக: புலிகள் தடை ஆணை அறிவிக்கப்பட்ட போது, ''வரதராஜப் பெருமாளை என்ன செய்யப் போகிறீர்கள்'' என்று வீரமணி சுற்றி வளைத்துப் பேசினார். புலி தடை சரியா, தவறா என்பதைப் பற்றிப் பேசுவதில் அதீத எச்சரிக்கையுடன் நடந்து கொண்டார். தடையை எதிர்த்து ஆங்காங்கே குரல்கள் கேட்க ஆரம்பித்த பிறகே தடை எதிர்ப்பு அறிக்கைவிட்டார். இட ஒதுக்கீட்டுக்காக பலமுறை தமிழகத்தை ''எரியவிட்ட'' வீரமணி இதற்கு ஒரு தீக்குச்சியைக்கூட கொளுத்தவில்லை. ஜெயலலிதாவிடம் ஐந்து லட்சம் வாங்கியவர், ஜெயா ஆட்சி பார்ப்பன ஆட்சியல்ல என்று இப்போது சான்றிதழ் கொடுத்துவிட்டார். வீரமணியிடம் இதற்கு மேல் எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.

பாமக: தலைவர் ராமதாஸ் வன்னிய சாதியின் தலைவராகப் பதவியைப் பிடித்தவர், இப்போது தமிழினத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலைவர் பதவியைப் பிடிக்கக் களத்தில் இறங்கியுள்ளார். வன்னியர்களுக்கு 20 சத இட ஒதுக்கீடு கோரி தமிழகத்தையே ஸ்தம்பிக்கச் செய்தவர்கள் வாயையும் கையையும் கட்டிக்கொண்டு போராட்டம் நடத்துகின்றனர் பாமகவின் சட்டமன்ற உறுப்பினர் பண்ருட்டியோ 'தடா' தர்பாரை எதிர்த்தும், புலிகளுக்கு ஆதரவாகவும் சட்டசபையில் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை, காங்கிரஸ் எதிர்ப்புக்கு எம், ஜி. ஆர். காளிமுத்துவை வைத்திருந்தது போல பாமகவின் சமாதான தூதுவர் பண்ருட்டி! 'வீரம்' பேச ராமதாஸ்!

நெடுமாறன் நடத்துவது அரசியல் கட்சியல்ல; பிரபாகரனின் சர்வதேச விளம்பர ஏஜென்சி. பிரபாகரனை உலகத்தமிழர்களின் தலைவராக்கும் 'அரிய' முயற்சியை மேற்கொண்டவர்தான் நெடுமாறன். புலிகள் பிரச்சனையில் கருணாநிதியை எதிர்க்கும் இவர் எம்ஜியாரை துதிக்கிறார். எம்ஜியார் இருந்தால் இப்படி நடக்குமா? அவர் பெயரைச் சொல்லி ஆட்சிக்கு வந்தவர் புலி தடை மூலம் துரோகம் செய்துவிட்டார்' என்கிறார். ஆனால் எம்ஜியார் புலிகளுக்கு உதவியது, ராஜீவ் காந்தியின் மேலாதிக்க நோக்கத்திற்கு உதவியாகத்தான் என்பதை மறைக்கிறார். அவ்வாறே இந்திராவையும் நல்லவராக்கும் முயற்சியிலீடுபடுகிறார். இந்திய அரசின் மேலாதிக்க நோக்கம் தமிழர்களுக்கு ஆபத்தானது என்பதை அப்பட்டமாக மூடி மறைக்கிறார்.

ஆகவே இவர்கள் அனைவருமே ஈழத்தமிழர் உரிமையை ஆதரிக்கவில்லை. பிரபாகரனின் உரிமைக்காகவே போராடுகிறார்கள். அதனால்தான் எம்ஜியார் பெரிய இன உணர்வாளர் போலவும் ஜெயலலிதா அதைக் கைவிட்டு விட்டதாகவும் புதுக்கரடி விடுகிறார்கள்.



9. புலிகளின் நலனும், ஈழத்தமிழரின் நலனும் வேறு வேறா? உங்கள் நிலைப்பாடு என்ன?

இரண்டும் வேறு வேறானவை என்பது மட்டும் அல்ல, ஒன்றுக்கொன்று முரணானவையும்கூட. ஈழத்தமிழரின் நலன் என்பது சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையும் ஜனநாயகமும். ஆனால் புலிகளின் நலன் என்பது ஈழத்தில் வரம்பற்ற சர்வாதிகாரம். ஆகவே ஈழத்தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை ஆதரிக்கும் நாம் புலிகளின் பாசிச சர்வாதிகாரத்தை எதிர்க்கிறோம்.

புலிகள் ஈழத்தில் தன்னை எதிர்க்கும் யாரையும் இயங்க அனுமதிப்பதில்லை. துரோகிகளைத் தவிர்த்து விட்டாலும், சிங்கள அரசையும், இந்திய மேலாதிக்கத்தையும் எதிர்க்கும்—அதே நேரத்தில் புலிகளின் பாசிசத்தோடு ஒத்துப்போகாத ஜனநாயக வாதிகள், கம்யூனிஸ்டுகளை புலிகள் படுகொலை செய்கின்றனர்; இன்றுவரை சிறையிலடைத்துச் சித்திரவதை செய்து வருகின்றனர். பலர் ஈழத்திற்கு வரமுடியாமல் அஞ்சி வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். சாதாரண குடிமக்கள்கூட ஜனநாயக உரிமையின்றி ஊமைகளாய் வாழ்கின்றனர்.

பிரபாகரன் இந்திய உளவு நிறுவனம் 'ரா'வின் உதவியைப் பெற்றார். இலங்கை ஒப்பந்தம் போடுமுன் ராஜீவ் காந்தியுடன் பேரம் பேசி மாதம் ஐம்பது லட்சம் வாங்கிக்கொள்ள சம்மதித்து ஒருதவணை பணமும் பெற்றுக் கொண்டார். எம்ஜியார் கணிசமாகப் பணம் கொடுக்கிறார் என்பதற்காக கருணாநிதி கொடுத்த நன்கொடையைக்கூட வாங்க மறுத்தார். மொத்தத்தில் அப்பட்டமான சந்தர்ப்பவாதியாகவே நடந்து கொண்டார்.

இந்தியாவில் ராஜீவையும், எம்ஜியாரையும் எதிர்க்கும் புலி ஆதரவாளர்கள்—புலிகளின் ஜனநாயக விரோத பாசிச போக்கை மூடிமறைத்து நேர்மையற்ற அரசியல் நிலைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாட்டைத்தான் மேற்கொள்கின்றனர். புலிகளும் இத்தகைய அரசியல்வாதிகளையே விரும்புகின்றனர்.

புலிகளைத் தவிர வேறு யாரும் இன்று களத்தில் இல்லையே என்ற வாதமும் தவறானது; தங்களைத் தவிர வேறு யாரும் இருக்கக்கூடாது என்பதற்காகவே மற்றவர்களை ஒழித்துக்கட்டியது புலிகள்தான்.

சுயநிர்ணய உரிமை என்பது பெரும்பான்மை இனத்தின் ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையும், சுயமாக சுதந்திரமாக அரசியல் பாதையைத் தீர்மானிக்கும் உரிமையும் மக்களுக்கு வேண்டும் என்பதாகும். ஆகவே சுயநிர்ணய உரிமை, ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை இவற்றை சாதிக்கப் போராடும் ஈழமக்களின் போராட்டத்தை ஆதரிக்கிறோம். புலிகளின் பாசிச நடவடிக்கைகள் ஈழப்போராட்டத்தை பலவீனப்படுத்திவிடும் என்பது மட்டுமல்ல. பேரினவாத ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை அடைந்தாலும், சிறுபான்மை பாசிசக் கும்பலின் அடிமைகளாக தமிழர்களை மாற்றிவிடும் என்பதால் புலிகளையும் எதிர்க்கிறோம்.

10. இது முரண்பாடில்லையா?

எம்மிடம் எந்த முரண்பாடும் இல்லை. நாம் கோருவது இந்தியாவிலும் சுயநிர்ணய உரிமை, ஜனநாயகம். ஈழத்திலும் அதையேதான் கோருகிறோம். அதனால்தான் புலிகள் இந்தியாவில் அரசியல் நடவடிக்கை மேற்கொள்ள உரிமை வேண்டும்—அதே போல ஈழத்திலும் துரோகிகள் அல்லாத அனைவருக்கும் ஜனநாயக உரிமை அரசியல் உரிமை வேண்டும் என்று கோருகிறோம். புலிகளை எதிர்ப்பவர்களுக்கும் இவ்வுரிமை வேண்டும் எனக் கோருகிறோம்.

ஆனால் முரண்பாடு இங்குள்ள புலி ஆதரவாளர்களிடம் தான் உள்ளது. இந்தியாவில் ஜனநாயகம் கோரும் இவர்கள்



ஈழத்தில் புலிகளின் பாசிசப் படுகொலைகளை மூடிமறைத்து விமர்சனமே இல்லாமல் ஆதரிக்கிறார்களே இதுதான் முரண்பாடு.

நீங்கள் ஆதரிக்காத புலிகள் மீது உங்களுக்கு ஏன் அக்கறை எனக் கேட்கலாம். தேர்தல் பாதையை நாங்கள் நிராகரிக்கிறோம், ஆனால் 356ஐப் பயன்படுத்தி திமுக ஆட்சியைக் கலைத்தபோது ஜனநாயக விரோத நடவடிக்கை என்பதால் அதை எதிர்த்தோம். எங்களுக்குக் கடவுள் நம்பிக்கை முற்றாக இல்லை. ஆனால் தாழ்த்தப் பட்டவர்களுக்கு ஆலயத்தில் நுழையும் உரிமை மறுக்கப் படும் போது அதை எதிர்க்கிறோம்.

இந்தியாவில் புலிகளிடம் ஆயுதப்பறிப்பு நடந்தபோது, இந்திய ராணுவ ஆக்கிரமிப்பின் போது, அகதிகளை வெளியேற்றியபோது, கடத்தல் தடுப்பு என்று கடல் முற்றுகையிட்ட போது... என்று ஒவ்வொரு முறையும் புலிகளின் உரிமைக்குக் குரல் கொடுத்தோம்.

ஆனால் கண்மூடித்தனமான புலி ஆதரவை எதிர்க்கிறோம். ஒன்று வாழப்பாடி போல் எதிர்க்க வேண்டும் அல்லது நெடுமாறன் போல் ஆதரிக்க வேண்டும். மூன்றாவது கருத்தே கூடாது என்பவர்கள் தங்களுக்கென தனி கட்சியே வைத்துக் கொள்ளத் தேவையில்லை. புலிகள் பிரச்சினைக்கு மட்டுமல்ல; அனைத்திற்கும் இது பொருந்தும்.

ஆகவே, எமது நிலைப்பாடு தெளிவானது. இந்தியாவாயினும், இலங்கையிலாயினும் ஜனநாயக உரிமைக்கு ஆதரவாகவும், பாசிசத்திற்கு எதிராகவும் போராடும் எங்கள் கருத்தில் முரண்பாடு ஏதுமில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



11. மக்கள் பிரச்சனைகள் பல இருக்கும்போது இதற்கு இவ்வளவு முக்கியத்துவம் தேவைதானா?

பத்திரிகைகளும், நடுநிலையாளர் எனப்படுவோரும் பரப்பும் கருத்து இது: எந்தப் பிரச்சனையை அரசியல் அரங்கில் முன்வைத்தாலும் இவர்கள் வேறு பிரச்சனைகளைக் காரணம் காட்டுவர்.

ஈழப்பிரச்சனையை முன்வைக்க இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று இப்பிரச்சனையின் முக்கியத்துவம். இரண்டு பொய்ப் பிரச்சாரத்திற்குப் பலியாகி உணர்வுகுன்றிய மக்களுக்கு உணர்வூட்டுவது.

ஈழப்பிரச்சனையின் மையமாக உள்ள புலிகள் தடை என்பது பார்ப்பன ஆட்சியின் இனஉணர்வு ஒழிப்பையும், புரட்சியாளர் மீதான அடக்குமுறையையும் மையமாகக் கொண்டது. இது மக்களின் ஜனநாயக உரிமை பற்றிய பிரச்சனை என்ற வகையில் அவசியமும் முக்கியத்துவமும் உடையதாகிறது. புலிகள் பிரச்சனையை விட்டுவிடலாம் என்றால் ஏன்? என்ன காரணம் என்பதை விளக்கவேண்டும். அதை விட்டுவிட்டு 'வேறு மக்கள் பிரச்சினை' எனக் காரணம் காட்டுபவர்கள் அரசின் ஏஜெண்டுகள் அல்லது அடக்குமுறைக்கு அஞ்சும் கோழைகள்.

1983க்குப் பின் ஈழத்தமிழருக்கு ஆதரவாகவும், புலிகளுக்கு ஆதரவாகவும் நாய்கள்கூட (நெடுஞ்செழியன், மா பொ சி உட்பட) ஊளையிட்டன. ஏனெனில் அன்று அரசின் கையில் தடிக்கம்பு இல்லை. ஆறு கோடி தமிழர்களும் ''வீரம்'' பேசினர். அப்போதும் நம்மக்களுக்கு விலையேற்றம், குடிநீர், வேலையின்மை என ஆயிரம் பிரச்சனை இல்லாமலா இருந்தது? ஆனாலும் அன்று ஈழப்பிரச்சனை முக்கிய பிரச்சனையாக முன்நின்றது. இன்று மக்கள் மத்தியில் நிலவும் மௌனத்தையும், உணர்வின்மையையும் போக்க வேண்டியது மிக முக்கியமானது.



புலிகள் தடையை எதிர்ப்பது இந்தியாவில் பாசிசப் பார்ப்பனக் கும்பலை எதிர்த்த இயக்கத்தின் ஓர் அங்கம். எனவே புலிகள் தடை எதிர்ப்பு ஒரு அரசியல் கடமையாகும். மக்கள் பிரச்சனையின் ஓர் முக்கிய அம்சமும் ஆகும்.

*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இருண்ட காலம்

பார்ப்பன பாசிச ஜெயா கும்பலின்
காட்டுதர்பாரை எதிர்த்துக் குரல் கொடுக்கும்
மக்கள் கலை இலக்கியக் கழகத்தின்
60 நிமிடப் பாடல் ஒலிப்பேழை.

விலை : ரூ. 30 அஞ்சல் செலவு : ரூ. 10

**படியுங்கள்**

புதிய ஜனநாயகம்
மாதமிருமுறை அரசியல் ஏடு.

புதிய கலாச்சாரம்
மக்கள் கலை இலக்கியக் கழக. மாத இதழ்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்